**டிசம்பர் -1**

**உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக**.

**- மத் 22:39.**

உன்னுடைய பிறன் உனக்கு விரோதமாகத் தன்னுடைய புத்தியையும், நாவையும் பொல்லாத சமயங்களிலும் அவதூறிலும் உபயோகிக்க நீ விரும்பமாட்டாய். நீயும் அவனுக்கு அவ்விதமாகச் செய்யக்கூடாது. கர்த்தருடைய உடன்படிக்கையின் கீழுள்ள எல்லோரும், பிறனுக்கு விரோதமாக சந்தேகம் கொண்ட எந்த சொல்லையும் சொல்லக்கூடாது என்பதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கர்த்தருடைய பிரமாணம் கட்டளையிடுகிறது. மற்றவர்களோடு சேர்ந்திருந்த சர்ந்தப்பநிலையின் காரணமாக, விஷய ஞானமில்லாத சந்தேகம் மனதில் பலவந்தமாகப் புகுத்தப்பட்டால், நம்முடைய புது மனது உடனே தன்னுடைய இயல்பான தயவினால், அது தவறான செய்தி அல்லது தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டிருக்கிறதாக எண்ணமெழுப்பி, சந்தேகத்தை ஈடுசெய்ய வேண்டும். குற்றவாளியாகத் தோன்றுகிறவருக்கு எதிராகவுள்ள சந்தேகத்தை நம்பக்கூடாதென்று தள்ளிவிட வேண்டும். **- Z , 99, 72 (R 2442)**

இனம் நாட்டுரிமை, ஆண் பெண் பாகுபாடு, பதவி சீதோஷ்ணநிலை, உறவு அல்லது இருக்கும் நிலை இவைகளின் சம்பந்தமின்றி ஒவ்வொரு சுயேச்சியான சன்மார்க்க காரியத்தாலும், நம்முடைய பிறன் ஆவான். விசேஷமாக நமக்கு பிறன் என்று சொல்லப்படுகிறவர்கள் முதலாவது ஆதாமுக்குள் உள்ளவர்கள். இரண்டாவது கிறிஸ்துவுக்குள் உள்ளவர்கள். பிறரில் சிலர் மற்றவர்களைவிட நமக்கு மிகவும் சமீபத்திலிருக்கிறார்கள். வேறுபட்ட அளவில் அவர்கள் நமக்கு சமீபத்திலிருப்பது வேறுபட்ட அளவில் அவர்களுக்கு நமக்குள்ள கடமையைத் திட்டமிடுகின்றது. இவ்விதமாக அந்நியரைவிட நம்முடைய குடும்பங்களுக்கும், பரீட்ச்சார்த்தமாக நீதிமான்களாக்கப்பட்டவர்களைவிட பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களும், நீதிமான்களாக்கப்பட்டவர்களைவிட பரீட்ச்சார்த்தமாக நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கும் நாம் அதிகம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். கீழே கொடுக்கப்பட்டிருக்கிற காரியம் இந்த மூலவாக்கியத்தின் பயிற்சிக்குரிய உபயோகமாக இருக்கிறதென்று தோன்றுகிறது. நம்மை பிறனுடைய இடத்தில் வைத்து அவனை நம்முடைய இடத்தில் வைத்து, சம்மந்தப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்துக்குரிய கர்த்தருடைய சித்தத்தை அறிந்து, அந்த நம்முடைய அறிவால் ஆளப்பட்டு அவன் நமக்குக் கொடுக்க விரும்புவதுபோல, நாம் நம்முடைய பிறருக்கும் அதே நல்மனதையும், ஊழியத்தையும் கொடுக்கவேண்டும். கடமை அன்பின் சட்டம் இதுவே. அதாவது நம்முடைய உடன் ஜனங்கள் சார்பாக நீதியைச் செய்வது. இந்தச் சட்டத்திற்கு மீறி நம்முடைய தியாகம் இருக்குமானால், அது தேவனுக்கு அங்கீகரப்பட்டதாய் இருக்காது. **- P 32,197**.

**ஒத்த வாக்கியங்கள் :-**

லேவி 19:18, மீகா 6.8, மத் 7.12, 9.13, மாற் 12.31, ரோம 13.9, கலா 5.14. யாக் 2.8, 1தீமோ1.7, 1பேது 1.22, 2பேது 1.7, 1யோவா3.18.

**கோபுர வாசிப்பு : Z 15,168 (R 5699)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் என்னைப்போல் என் பிறனையும் நேசித்தேனா? பலன்கள் எவை?